**I.D.OP.No.**06/2021

Date.11.05.2022

Witness : MW – 1 B Rajavel Field Officer

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>-

எனது சொந்த ஊர் சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஆகும். நான் கடந்த 1 வருடமாக பொறுப்பில் இருக்கிறேன். நான் கள அதிகாரியாக பணியாற்றி வருகிறேன். அதற்கான அடையாள கடிதத்தை வழக்கில் ஆஜர் செய்துள்ளேன். மனுதாரரை எனக்கு தெரியும். மனுதாரர் சுமார் 6 மாத காலம் வேலை பார்த்துவந்தார். பணியின் தன்மையை மனுதாரருக்கு எனக்கு முந்தைய அதிகாரி சொன்னதாக அறிந்தேன். மனுதாரர்தான் வேலை கேட்டு வந்தார். மனுதாரருக்கு பணியின் தன்மை மற்றும் சம்பள விபரங்களை கூறியுள்ளோம். மனுதாரருக்கான சம்பள விபரம் அடங்கிய பதிவேடு விபரங்களை வழக்கில் ஆஜர் படுத்தியுள்ளேன். மனுதாரரின் சம்பளத்தை மாதம் மாதம் வங்கியில் போட்டுவிடுவோம். மனுதாரரின் சம்பள சான்றாவணம் சமர்ப்பித்துள்ளேன். விடுப்பு எடுக்கும் நடைமுறையை நாங்கள் பணியாளருக்கு வாய்மொழியாக சொல்வோம். மனுதாரரின் கல்வித்தகுதி பற்றி எனக்கு தெரியாது. 10 வது தேர்ச்சி பெற்றால்தான் வேலைக்கு எடுப்போம். மனுதாரர் எந்த தேதியில் வேலைக்கு வரவில்லை என்பது தற்போது எனக்கு தெரியாது. மனுதாரருக்கு வருடத்திற்கு 240 நாட்கள் வேலை செய்ய வேண்டும் என்று நான் விபரம் எதுவும் சொல்லவில்லை. மனுதாரர் வீட்டில் இருக்குமாறும் அவர் அடுத்தவேலை கிடைக்கும் வரை அவருக்கு சம்பளம் வரும் என்றும் யாரும் சொன்னார்களா என்றால் அப்படி நடைமுறையில் இல்லை. வேலை பார்த்தால்தான் சம்பளம் கிடைக்கும். மனுதாரர் ஒரு நாள் விடுப்பு எடுத்ததால் நாங்கள் கோபம் கொண்டு அவருக்கு பணி தராமல் மறுத்துவிட்டோம் என்று சொன்னால்

சரியல்ல. மனுதாரருக்கு மீண்டும் வேலைக்கு வர முழு அதிகாரம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மறுவிசாரணை - இல்லை.